**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 194/2004**

Deposition of P**<u>.W. -1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. R.Kokilavani, Junior Assistant of this court, on 01.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : இளையப்பன் Father Name : ராமசாமி

ஆரம்ப நேரம் : 12.26P.M

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.8 ஆனது இவ்வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பற்றி அது தொடர்பான சங்கதிகளையும் வழக்குரையில் சேர்க்க திருத்தம் மேற்கொள்ள வேண்டி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கானது நானும், எனது தாயார் மற்றும் சகோதரர் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் பிரச்சனையில் தீர்வு காண தற்பொழுது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆனது எந்த வகையிலும் தொடர்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல, தொடர்புள்ள ஆவணம்தான். மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்ட நாளில் வழக்கு சொத்து தொடர்பாக உரிமை மூல ஆவணம், பட்டா ஆகிய எவ்வித ஆவணங்களும் எங்கள் குடும்பத்தின் பெயரில் இல்லை என்றால் சரிதான், ஆனால் மேற்படி ஆவணத்தில் இந்த வழக்கு சொத்து தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கு எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வழக்கு சொத்து தொடர்பாக எவ்வித உரிமை ஆவணமும், உரிமையும் இல்லாமல் இதுபோன்று ஒரு ஆவணம் ஏற்படுத்திக் கொண்டது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் வழக்கு சொத்து தொடர்பாக எங்கள் குடும்பத்திற்கு உரிமை உள்ளது போல் இவ்வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ன்படி எனது

தாயாரும், எனது சகோதரருமான 3-ஆம் வாதியும் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லையென எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அதேபோல் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலமும் தாவா சொத்தை எனக்கு ஒப்படைப்பதாக எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

4. மேற்படி ஆவணத்தின் மூலம் எனது தாயாரும், சகோதரரும் அவர்களது உரிமையை விட்டுக்கொடுத்து எழுதி இருப்பதால் அந்த ஆவணம் சட்டப்படி பதிவு செய்யப்படவேண்டும் என்றாலும், அவ்வாறு பதிவு செய்யப்படாத காரணத்தினால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றாலும் சரியல்ல. எவ்வித உரிமையும் இல்லாமல் மேற்கண்ட ஆவணம் எழுதப்பட்டுள்ளதால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், 4, 5 பிரதிவாதிகளை மேற்படி ஆவணம் எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.

4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.38 P.M.

<u>9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> (ஆரம்ப நேரம்: 03.37P.M)

1. இந்த வழக்கு கடந்த 2004-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த தாவாவை தாக்கல் செய்யும் வரையில் எனக்கும், எனது சகோதரருமான 3-ஆம் வாதிக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லையென்றால் சரிதான், ஒரே குடும்பமாகத்தான் இருந்து வந்தோம். வா.சா.ஆ.8 எந்த சூழ்நிலையில் எழுதப்பட்டது என்றால் கடந்த 2003-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினையில் எனக்கு துலுக்கனூர் கிராம நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது, அதன் காரணமாக மேற்படி ஆவணம் எழுதப்பட்டது.

2. மேற்படி ஆவணம் வழக்கிற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை, வழக்கிற்கு பின்னிட்டுதான் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி ஆவணத்தின் விவரங்கள் இந்த வழக்குரையில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். 3-ஆம் வாதி தனது சாட்சியத்தில் கடந்த

05.05.2003-ஆம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை செல்லாது என கூறியதால்தான் இந்த ஆவணம் தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.8 ஆவணம் கடந்த 2003-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாக கூறப்படும் நிலையில் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததற்கு என்ன காரணம் என்றால் 3-ஆம் வாதி தற்பொழுது பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு எனக்கு எதிராக செயல்படுவதால் தற்பொழுது மேற்கண்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அவ்வாறு 3-ஆம் வாதி எனக்கு எதிராக செயல்படும் பட்சத்தில் அவரை பிரதிவாதியாக மாற்றக்கோரி சட்ட நடவடிக்கை எதுவும் நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் இவ்வழக்கை எனது தாயாரும், சகோதரரும் முடித்துக் கொடுப்பதாக கூறி ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

4. எனக்கும், எனது தாயார் மற்றும் எனது சகோதரருக்குமிடையே கடந்த 05.05.2003 அன்று பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டு அதனடிப்படையில் 3-ஆம் வாதிக்கு துலுக்கனூர் கிராமத்தில் எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் தான் வா.சா.ஆ-8 ஆனது எழுதப்படும் சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரிதான், மேற்படி ஆவணத்தை நாங்கள் மூன்று நபர்களும் சேர்ந்துதான் எழுதிக் கொண்டோம். பாகப்பிரிவினையின்பொழுது எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாகத்தான் தற்பொழுது 2, 3 வாதிகளாகிய நாங்கள் தனிதனியாக செயல்பட்டு தற்பொழுது வழக்கிற்காக வா.சா.ஆ.8-ஐ நான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் எனக்கும், 3-ஆம் வாதிக்கும் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.194/2004, Dt.01.04.2026.